ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1758/28 - 2012 මැයි 18 වැනි සිකුරාදා - 2012.05.18

*1758/28 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. ஓ. 43/2011.*

**1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 2011 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகார சபைச் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்தல்.*

2. 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) அத்துடன் (ஈ) என்னும் பந்திகளை நீக்கஞ் செய்து அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(ஆ) இலங்கை இராணுவப் படையின் பதவியினர் பிரதானி ;

(இ) இலங்கைக் கடற்படையின் பதவியினர் பிரதானி ;

(ஈ) இலங்கை வான்படையின் பதவியினர் பிரதானி ;"

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் தமிழ், சிங்கள உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*6 - 171*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.